**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.160/2023**

**Deposition of LW-4/PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சடையப்பன் | **Age** | : | 57/2026 |
| **Father's Name** | : | திரு. லட்சுமணன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | கோம்பை | **Calling** | : | கூலி வேலை |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **24/06/2026.**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் கோம்பையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 16.2.2023 ஆம் தேதி 11 மணிக்கு துரைகுளத்து வட்டம் அருகே உள்ள தண்ணீ ஆலமரப் பகுதியில் கண்ணன் என்பவரது தோட்டத்தில் தென்னை மட்டைகளை நானும் ரங்கேஷ்வரன் என்பவரும் வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது பிரித்திவிராஜ் என்பவர் அங்கு வந்து கண்ணன் மற்றும் அவரது மனைவி நித்தியா வேலை செய்வதை போட்டோ எடுத்தார் என்றும் நித்தியா போட்டோ எடுக்க வேண்டாம் என்று

கூறினார் என்றும் மேற்கொண்டு பிரித்திவிராஜ் போட்டோ எடுத்ததால் கண்ணன் அருவாளை கொண்டு பிரித்திவிராஜின் காலில் வெட்டினார் என்றும் நித்தியா பிருத்திவிராஜை அடித்தார் என்றும் வனஜா கைகளால் பிரிதிவிராஜை கைகளால் அடித்தார் என்றும் நானும் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த அமரன், ரங்கேஸ்வரன் அவர்களை விலக்கி விட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.24 18:03:07 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**